இடங்களில் இப்படிப்பட்ட பிரச்சினை ஏற்பட்டு விடுகிறது. சில பாலங்கள் எதிர்பார்க்காமல் உடைந்து பிரச்சினைகள் ஏற்பட்டு விடலாம். ஏற்கனவே ஒரு அமைப்பு இருக்கிற காரணத்தால் இதற்குத் தனியாக புதிய அமைப்புத் தேவையில்லையென்றே கருதுகிறேன். வேண்டுமானால் இந்தக் கருத்தைச் சொல்லி கண்காணிப்பாக இருக்க வேண்டுமென்று குறிப்பிட்ட அதிகாரி களுக்கு நாம் அறிவுறுத்தலாம்.

(எ) திருச்சி மாவட்டம், கோட்டத்தூர்—புத்தனாம்பட்டி சாலையில் காட்டாற்றின் குறுக்கே பாலம் கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து.

திரு. செ. இரத்தினவேலு : தலைவர் அவர்களே, ''திருச்சி மாவட்டம், கோட்டத்தூர்—புத்தனாம்பட்டி சாலையில் காட்டாற்றின் குறுக்கே சறுக்கு பாலம் கட்டப்படாததால் போக்குவரத்து பாதிப்பு குறித்த'' அவசரப் பொது முக்கியத்து வம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

அறிக்கை.

கவன ஈர்ப்புத் தீர்மானத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பணி யானது பெரமங்கலம்கீளவாடி சாலையில் கி.மீ. 14/6ல் ஒரு உயர் மட்டப் பாலம் கட்டும் பணியாகும். இச்சாலை ஒரு அரசு இதர மாவட்ட சாலையாகும். இச்சாலை திருச்சி—துறையூர் தம்மாம்பட்டி சாலை (மாவட்டப் பெருஞ்சாலை)யில் பிரிந்து திருச்சி பெரம்பலூர் சாலையில் (மாவட்டப் பெருஞ்சாலை) இணைகிறது. இச்சாலையின் நீளம் 20 கி.மீ. ஆகும். இச் சாலை ஒரு வழித்தடம் அகலம் கொண்ட தார்ச்சாலையாகும். இச்சாலையில் கி.மீ. 14/6ல் 15 மீட்டர் நீர்வழிப் பாதையுடன் கூடிய ஓடை ஒன்று குறுக்கிடுகிறது. இந்த இடத்தில் ஒரு உயர் மட்டப் பாலம் கட்டுவதற்கு உத்தேசமாக ரூ. 5.00 இலட்சங்கள் தேவைப்படும். இப்பணி இதுவரை அரசின் ஒப்புதல் பெற்ற திட்டங்கள் எதிலும் இடம் பெறவில்லை. இப்பணியினை எதிர் வரும் காலங்களில் மாநில சாலைகள் திட்டத்தில் இதர மாவட்ட சாலைகள் பிரிவின் கீழ் அரசின் நிதி நிலைமையைப் பொறுத்து மேற்கொள்ள பரிசீலிக்கப்படும்.

திரு. செ. இரத்தினவேலு : தலைவர் அவர்களே, அந்தச் சாலை தாலுகா தலைநகரான துறையூரை இணைக்கக் கூடிய சாலையாகும். புத்தனாம்பட்டி, ஓமாந்தூர் போன்ற நான்கு பஞ்சாயத்துக்கள் அடங்கிய கிட்டத்தட்ட 20 கிராமங்களை

1987 ஏப்ரல் 25] [திரு. செ. இரத்தினவேலு]

இந்தச் சாலை துறையூரோடு இணைக்கிறது. மழைக் காலங்களில் கிட்டத்தட்ட 5, 6 அடி அளவிற்கு தண்ணீர் இந்தச் சாலையின் குறுக்கே போகிறது. அந்த காலத்தில் இந்தப் பகுதியிலிருந்து துறையூருக்கு செல்வதற்கும், துறையூரில் இருப்பவர்கள் புத்தனாம்பட்டியில் இருக்கிற கல்லூரி, மருத்துவமனைக்குச் செல்வதற்கும் இடையூறு ஏற்படுகிறது. ஆகவே இந்தச் சாலையினுடைய அவசியத்தைக் கருதிஇந்த ஆண்டு அமைச்சர் அவர்கள் இந்த சறுக்குப் பாலத்தைக் கட்ட ஆணை பிறப்பிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே, இந்த ஆண்டு அதை எடுத்துக்கொள்வதற்கான வாய்ப்பு இல்லை. காரணம் ஏற்கனவே பட்டியல் தயாரிக்கப்பட்டு விட்டது. ஆனால் இதிலே இருக்கிற சிக்கல்களை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். எதிர்காலத்திலே நிதி நிலைமைக்கேற்ப நடவடிக்கை எடுக்கலாம்.

திரு. செ. இரத்தினவேலு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டு உயர்மட்டப் பாலம் கட்டுவதற்காக கிட்டத்தட்ட 5 இலட்சம் ரூபாய் செலவில் திட்டம் தீட்ட வேண்டும் என்று சொன்னால் அது முடியாது என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இந்தப் பாலத்தின் அவசியத்தைக் கருதி, ஒரு சறுக்குப் பாலம் அமைப்பதற்கு அமைச்சர் அவர்கள் ஆலோசனை செய்ய முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே, பாலம் கட்டுகிறபோது, என்ன அவசியமோ, அதைக் கட்டுவது நல்லது. ஏற்கனவே அரசாங்கத்திலே நிதிப் பிரச்சினை என்று சொல்கிறபோது, தற்காலிகமாக ஒரு பாலம், பிறகு நிரந்தரமாக ஒரு பாலம் கட்டுவது என்பது, அரசு வீணாக பணத்தைச் செலவழிப்பதாகும். எனவே இன்று இருக்கக் கூடிய சூழ்நிலையில் அது முடியாத காரியம். எனவே அதற்கு எப்படித் தேவையோ அப்படியே திட்டம் தீட்டி, நிதிநிலைமை சரியாக இருக்கிறபோது, இதைக் கட்டுவதற்கான நடவடிக்கையை எடுக்கலாம்.

(ஏ) சேலம்-ஆத்தூர் சாலையில் ஏற்பட்ட விபத்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. சி. பழனிமுத்து, திருமதி தா. இராசாம்பாள், திருவாளர்கள் கு. ரமணி, வி.பி. சிந்தன், ஜே. ஹேமச்சந்திரன், சோ. வீரய்யன், மற்றும் எம். செல்லமுத்து ஆகியோர் ஒரே பொருள் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்துள்ளனர். அவர்களில் ஒருவர் மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சரின் கவனத்திற்கு அதைக் கொண்டு வருவார்.